தேர்வு நாள்: 18.04.2022 **TEST - 12 (HISTORY FULL TEST)** நேரம்: 180 நிமிடங்கள்

**தேர்வைத் துவங்கும் முன்னர், Announcement – 21C - ஐ ஒரு முறை முழுவதுமாகப் படித்துவிடுங்கள்.**

**All the Best!!!**

1) புத்தரின் முற்பிறப்பு, அவருடைய வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளவை?

A) தேராகதைகள் B) தேரிகதைகள்
C) ஜாதகக்கதைகள் D) இவையனைத்தும்

2) முதலாம் மகேந்திரவர்மனை சமணத்திலிருந்து சைவ மதத்திற்கு மாற்றியவர் யார்?

A) அப்பர் B) ஞானசம்பந்தர் C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

3) தவறான இணை எது?

1. முதலாம் மகேந்திரவர்மன் - அவந்தி சுந்தரி கதாசாரம்
2. பாரவி - கிரதார்ஜூனியம்
3. தண்டி - பகவத்வியூகம்

A) 1 & 2 B) 1 & 3
C) 2 & 3 D) மேற்கண்ட எதுவுமில்லை

4) அரிகேசரி மாறவர்மன் எந்த பல்லவ மன்னனின் சமகாலத்தவர்?

A) முதலாம் மகேந்திரவர்மன் B) இரண்டாம் நரசிம்மவர்மன்
C) மூன்றாம் நரசிம்மவர்மன் D) முதலாம் நந்திவர்மன்

5) சோழர்களின் ராணுவ முகாம்கள் _____ என்று அழைக்கப்பட்டன

A) நத்தங்கள் B) கம்மாக்கள் C) மாடங்கள் D) கடகங்கள்

6) தாராஷூகோவால் 'சர்-இ-அக்பர்' என்னும் பெயரில் மொழி பெயர்க்கப்பட்டது எது?

A) மகாபாரதம் B) முகலாயர் வரலாறு
C) உபநிடத்தங்கள் D) அக்பரின் வரலாறு

7) குப்தர் கால சுவரோவியங்கள் காணப்படும் இடங்களில் தவறானது?

A) அஜந்தா B) பாக் C) பாதாமி D) எலிபெண்டா

8) ஆதிசங்கரர், இராமானுஜர் ஆகியோரின் தத்துவங்களை இன்றளவும் லட்சக்கணக்கான மக்கள் போற்றுவதற்கு அவை உபநிடதக் கருத்துகளைக் கொண்டிருப்பதே காரணம் என்று கூறுபவர் யார்?

A) ஷோபன்ஹோவர் B) அல்பெருனி C) அமுர்-டி-ரின் கோர்ட் D) வின்டர்நீட்ஸ்

9) புத்த சமய மாநாடுகளையும் அவை நடைபெற்ற ஆட்சிகாலத்தையும் பொருத்துக:

(i) முதல் மாநாடு - 1. கனிஷ்கர்
(ii) இரண்டாம் மாநாடு - 2. அஜாதசத்ரு
(iii) மூன்றாம் மாநாடு - 3. காலசோகன்
(iv) நான்காவது மாநாடு - 4. அசோகர்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 |
| B) | 4 | 3 | 2 | 1 |
| C) | 2 | 3 | 4 | 1 |
| D) | 3 | 1 | 4 | 1 |

ETW ACADEMY

**10)** மாலிக் உல் இஸ்லாம் ஜாமலுதீன் எனும் அராபிய வணிகரின் வணிக நிறுவனம் செயல்பட்ட இடம் எது?

A) மதுரை நகர் B) கொற்கை துறைமுகம்

C) தொண்டி துறைமுகம் D) காயல் துறைமுகம்

**11)** மம்லுக் அரச வம்சத்திற்கான அடிக்கல்லை நாட்டியவர்?

A) முகமதுகோரி B) ஜலாலுதீன் C) குத்புதீன் ஐபக் D) இல்துமிஷ்

**12)** ஆதிகிரந்தம் யாருடைய புனித நூல் ஆகும்?

A) ஜொராஸ்டிரர் B) பார்சி C) சீக்கியர் D) பெர்ஷியர்

**13)** இரண்டாம் நந்திவர்மனின் சமகாலத்தவர் யார்?

A) பூததாழ்வார் B) அப்பர் C) திருமங்கை ஆழ்வார் D) ஆண்டாள்

**14)** சித்தன்னவாசல் குடைவரையில் உள்ள ஓவியங்கள் யாருடைய காலத்தவை?

A) முதலாம் வரகுணன் B) இரண்டாம் வரகுணன்

C) மாறவர்மன் சுந்தரபாண்டியன் D) ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்

**15)** பாதுகாப்புக் கட்டணமாக மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சௌத் வரியின் அளவு என்ன?

A) மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு (1/3)

B) மொத்த வருமானத்தில் இரண்டில் ஒரு பங்கு (1/2)

C) மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு (1/4)

D) மொத்த வருமானத்தில் ஆறில் ஒரு பங்கு (1/6)

**16)** இரண்டாம் ஆங்கிலேய - மராத்திய போர் மூண்டதற்கு காரணமான ஒப்பந்தம் எது?

A) பேசின் ஒப்பந்தம் B) சால்செட் ஒப்பந்தம்

C) பூனா ஒப்பந்தம் D) சால்பை ஒப்பந்தம்

**17)** அக்பர் காலத்தில் ஒழிக்கப்பட்டவைகள் / ரத்துசெய்யப்பட்டவைகள் எவை?

1. ஜிசியா வரி (தலை வரி)
2. இந்து புனித யாத்திரை வரி
3. உடன்கட்டை ஏறும் முறை
4. குழந்தைத் திருமண முறை

A) 1, 3 & 4 B) 2, 3 & 4

C) 1, 2 & 3 D) மேற்கண்ட அனைத்தும்

**18)** பொருத்துக:

(i) தாராஷூக்கோ - 1. மாளவம், குஜராத் ஆளுநர்

(ii) ஷா ஷீஜா - 2. தக்காண ஆளுநர்

(ii) ஔரங்கசீப் - 3. பட்டத்து இளவரசர்

(ii) மூரத் பஷ் - 4. வங்காள ஆளுநர்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 3 | 4 | 2 | 1 |
| C) | 3 | 4 | 1 | 2 |
| D) | 4 | 3 | 2 | 1 |

ETW ACADEMY

ETW ACADEMY

**19)** குப்தர்கால நாணயங்கள் பற்றிய பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

1. குப்தர் காலத்தில் தங்க நாணயங்கள் மீது விதிக்கப்பட்ட வரி ஹிரண்யா ஆகும்
2. நாணயங்களில் முதன்முதலில் இடம்பெற்ற குப்த அரசர் ஸ்ரீகுப்தர் ஆவார்
3. குப்தர்களின் பொற்காசுகள் ருபியா என்று அழைக்கப்பட்டன
4. வெள்ளி நாணையங்களை வெளியிட்ட முதல் குப்த அரசர் முதலாம் சந்திரகுப்தர் ஆவார்
5. முதலாம் சந்திரகுப்தர் வெளியிட்ட தங்க நாணயங்களில் பொறிக்கப்பட்ட வாசகம் "லிச்சாவையா" என்பதாகும்

A) 1, 2 & 5 B) 3 & 4
C) 2, 4 & 5 D) மேற்கண்ட அனைத்தும்

**20)** விட்டலர் சாமி கோயிலில் உள்ள மகாமண்டபம், திராவிடக் கோயில் அமைப்புக் கலைக்கு ஓர் அணிகலன் போல் விளங்குகிறது என்றவர் யார்?

A) நாரிமன் B) பெர்ஸி ப்ரெளன் C) நூனிஸ் D) பயஸ்

**21)** அசோகரது கல்வெட்டுகளில் கானப்படும் "புலிந்தர்கள்" யார் என்று கருதப்படுகிறது?

A) சேரர்கள் B) பல்லவர்கள் C) இராட்டிரகூடர்கள் D) களப்பிரர்

**22)** தனது ஆட்சிக்குட்பட்ட எல்லா கோயில்களிலும், அர்த்த மண்டபம், மணி மண்டபம், சன்னதிகள் ஆகியவற்றை கட்டித்தந்த பாண்டிய மன்னன் யார்?

A) மாறவர்மன் சுந்தரபாண்டியன் B) நெடுஞ்செழியன்
C) குலசேகர பாண்டியன் D) பொற்கை பாண்டியன்

**23)** சைவத் திருமறையான தேவாரம் யாருடைய காலத்தில் தொகுக்கப்பட்டது?

A) பாண்டியன் நெடுஞ்செழியன் B) இராஜராஜ சோழன்
C) முதலாம் நரசிம்மவர்மன் D) முதலாம் மகேந்திரவர்மன்

**24)** நானா சாகிப் என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) சிவாஜி B) பாலாஜி பாஜிராவ்
C) பாலாஜி விஸ்வநாத் D) இரண்டாம் பாஜிராவ்

**25)** ஷாஜகானின் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தவர்களைப் பொருத்துக:

(i) பெர்னியர் - 1. இத்தாலிய எழுத்தாளர் பயணி
(ii) தாவர்னியர் - 2. இங்கிலாந்து வணிகர்
(iii) மான்டெல்சோ - 3. பிரஞ்சு மருத்துவர்
(iv) பீட்டர்முன்டி - 4. பிரெஞ்சு வைர வியாபாரி
(v) மனுச்சி - 5. ஜெர்மன் பயணி மற்றும் துணிச்சல் வீரர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 5 | 2 |
| B) | 3 | 4 | 2 | 5 | 1 |
| C) | 3 | 4 | 5 | 2 | 1 |
| D) | 4 | 3 | 2 | 5 | 1 |

**26)** இந்தியாவிற்கு செங்கிஸ்கான் தலைமையிலான மங்கோலியரின் அச்சுறுத்தல் யார் ஆட்சியின்போது ஏற்பட்டது?

A) இல்துமிஷ் B) குத்புதீன் ஐபக் C) பால்பன் D) இல்திஸ்

**27)** குப்தர் காலத்தில் 'பாகா' என்ற வரி விதிப்பு என்ன?

A) விளைச்சலில் அரசன் பெறும் வழக்கமான ஆறில் ஒரு பங்கு வரி

B) அரசருக்கு கிராமங்கள் அவ்வப்போது வழங்க வேண்டிய பழங்கள், விறகு, பூக்கள்

C) கிராமத்தினரின் மீது குறிப்பிட்ட கால இடைவெளியில் விதிக்கப்படும் ஒரு வரி

D) ஆரம்பத்தில் விருப்பப்பட்டு வழங்கப்பட்ட வரியான இருந்து பின்னர் கட்டாய வரியாக மாற்றப்பட்ட ஒடுக்குமுறை வரி

**28)** இரண்டாம் சரபோஜி யாரை கல்வித்துறையின் முன்னொடியாகக் கருதினார்?

A) எம்.டபுல்யூ. ஜார்ஜ் B) மெக்காலே

C) சி.எஸ். ஜான் D) எம்.டபுல்யூ.வில்சன்

**29)** பாரசீகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற கவிஞரான அமிர்குஸ்ருவை ஆதரித்தவர் யார்?

A) இல்துமிஷ் B) குத்புதீன் ஐபக்

C) பால்பன் D) அலாவுதீன் கில்ஜி

**30)** சிந்துவெளியில் கிடைத்த பொருட்கள் மற்றும் நகரங்களை பொருத்துக:

(i) சங்கு - 1. தெற்கு ராஜஸ்தான்

(ii) கார்னிலியன் - 2. நாகேஷ்வர், பாலகோட்

(iii) வைடூரியம் - 3. லோத்தல்

(iv) செம்பு - 4. ஷார்டுகை

(v) ஸ்டீட்டைட் - 5. ராஜஸ்தான், ஓமன்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 1 | 2 | 3 | 4 | 5 |
| B) | 2 | 3 | 4 | 5 | 1 |
| C) | 2 | 4 | 5 | 1 | 3 |
| D) | 2 | 1 | 4 | 5 | 3 |

**31)** பௌத்த சமய நூல்கள் முப்பிரிவாக உள்ளன. அவற்றில் சேராதது எது?

A) சுத்த பீடகம் B) விநய பீடகம்

C) புத்த பீடகம் D) அபிதம்ம பீடகம்

**32)** குமாரசம்பவ சம்பு, தேவேந்திர குறவஞ்சி, முத்ரராக்சஸ்யா ஆகிய புத்தகங்களின் ஆசிரியர் யார்?

A) முதலாம் சரபோஜி

B) வெங்கோஜி

C) இரண்டாம் சரபோஜி

D) துல்ஜாஜி

ETW ACADEMY

**33)** முகலாயர்களின் பொற்காலம் என்று அழைக்கப்படுவது?

A) அக்பரின் காலம் B) ஔரங்கசிப்பின் காலம்

C) ஷாஜகானின் காலம் D) பாபரின் காலம்

**34)** தஷ்வந்த், பசவன், மிஸ்கினா ஆகியோர் யாருடைய அவையை அலங்கரித்த முக்கிய ஓவியர்களாவர்?

A) ஜகாங்கீர் B) ஷாஜகான் C) ஹுமாயூன் D) அக்பர்

**35)** இந்தியாவைப் பல "இனங்களின் அருங்காட்சியகம்" என்று குறிப்பிட்டுள்ளவர் யார்?

A) சர். ஐசக் ஸ்மித் B) சர். வில்லியம் ஆண்டர்சன்

C) டாக்டர். வின்சென்ட் ஆர்தர் ஸ்மித் D) டாக்டர். வில்லியம் ஆண்டர்சன் ஸ்மித்

**36)** காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோவில் எந்தப் பாணிக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்?

A) பாறைக் குடைவரைக் கோவில்கள் B) ஒற்றைக்கல் ரதங்கள்

C) ராஜசிம்மன் பாணி கட்டுமானக் கோவில்கள் D) நந்திவர்மன் பாணி கட்டுமானக் கோவில்கள்

**37)** சிதம்பரம் நடராஜர் கோவிலின் கூரைக்கு பொற்கூரை வேய்ந்தார்.

A) இராசேந்திர சோழன் B) முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

C) இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் D) முதலாம் பராந்தகன்

**38)** மராத்தியர்களின் கடைசி பேஷ்வா யார்?

A) நாராயண ராவ் B) சவாய் மாதவ் ராவ்

C) இரண்டாம் பாஜி ராவ் D) ரகுநாத் ராவ்

**39)** பின்வருவனவற்றுள் ஷாஜகானின் சிறப்பு அல்லாதது எது?

A) கட்டடக்கலையின் இளவரசர் B) கட்டடக்கலையின் பேரரசர்

C) பொறியாளர் பேரரசர் D) ஏதுமில்லை

**40)** தவறான இணை எது?

1. அக்பர் நாமா - அக்பர் எழுதியது
2. அக்பர் நாமா - அக்பரின் வரலாறு
3. அயினி அக்பரி - முகலாய நிர்வாகம்
4. அயினி அக்பரி - அபுல் பாசல்

A) 1 & 2 மட்டும் B) 2 & 4 மட்டும் C) 4 மட்டும் D) 1 மட்டும்

**41)** முழுவதும் தவறி விழுந்த ஹுமாயூன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்" - என்பது யாருடைய வார்த்தைகள்?

A) ஸ்டேன்லி லேன்பூல்

B) விக்டர் வேர்ல்பூல்

C) ஸ்டேன்லி வேர்ல்பூல்

D) விக்டர் லேன்பூல்

ETW ACADEMY

**42)** தைமூரின் படையெடுப்பு எம்மரபின் வீழ்ச்சிகு அடிகோலியது?

A) துக்ளக் B) மம்லுக்

C) கில்ஜி D) மொாத்த சுல்தான்கள்

**43)** அலகாபாத் தூண் கல்வெட்டு யாருடைய ஆட்சிக்கான மிக முக்கிய சான்று ஆகும்?

A) சமுத்திரகுப்தர் B) இரண்டாம் சந்திரகுப்தர்

C) ஸ்ரீ குப்தர் D) குமார குப்தர்

**44)** ஹரப்பா மக்கள் பின்பற்றிய பயிரிடல் முறை எது?

A) ஒற்றைப் பயிரிடல் முறை B) இரட்டைப் பயிரிடல் முறை

C) முப்பயிரிடல் முறை D) மேற்கண்ட அனைத்தும்

**45)** 'ஒவ்வொரு புராணமும் ஏதோ ஓர் உண்மையைக் கூற விழைகிறது என்று குறிப்பிடுபவர் யார்?

A) மாக்ஸ் முல்லர் B) ஈ.பி. டெய்லர் C) சி.சி. நார்த் D) ரூத் பெனிடிக்ட்

**46)** ராஜசிம்மன் என்று அழைக்கப்ப்டுபவர் யார்?

A) முதலாம் நந்திவர்மன் B) இரண்டாம் நரசிம்மவர்மன்

C) இரண்டாம் மகேந்திரவர்மன் D) முதலாம் மகேந்திரவர்மன்

**47)** பின்வருவனவற்றுள் பாண்டியர்காலத்தில் எழுதப்பட்ட இலக்கியம் எது?

A) தேவாரம் B) பண்ணிரு திருமுறைகள்

C) திருவாசகம் D) திருமந்திரம்

**48)** குற்றவாளிகளைக் கண்டுபிடித்து பறிமுதல் செய்வதற்காகக் கூடுதலாகக் காவல்துறை அதிகாரிகளை நியமனம் செய்தவர் யார்?

A) சிவாஜி B) பாலாஜி விஸ்வநாத்

C) மாதவ்ராவ் D) இரண்டாம் பாஜிராவ்

**49)** சிவாஜி தனது குருவாக ஏற்றுக்கொண்ட பக்தி இலக்கிய முன்னோடி யார்?

A) துக்காராம் B) ராம்தாஸ்

C) ஏக்நாதர் D) இவரனைவரையும்

**50)** முகலாயர் காலத்தில் நிகழ்ந்த ஐரோப்பிய குடியேற்றம் எது?

A) போர்துக்கீசியர், டச்சுக்காரர்கள் B) டேனியர்

C) பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் D) மேற்கண்ட அனைத்தும்

**51)** எம்மசூதியின் நுழைவாயில் புலந்த் தர்வாசா அல்லது உயர்ந்த நுழைவாயில் எனப்படுகிறது(176 அடி)?

A) ஜும்மா மசூதி

B) பாபர் மசூதி

C) பாதுஷாகி மசூதி

D) முத்து மசூதி

ETW ACADEMY

**52)** பின்வரும் கூற்றுகளில், ஷெர்ஷாவின் சீர்திருத்தங்களைப் பற்றிய கூற்றுகளில் தவறானதைத் தேர்க:

A) ஷெர்ஷா, தனது அரசை மிகவும் மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றுவதில் உடன்பாடு இல்லாமல் இருந்தார்.

B) தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள கிராமங்களில் களவு போகும் பொருட்களுக்கு கிராமத் தலைவரே பொறுப்பு என்றானவுடன் கிராமத் தலைவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்படத் தொடங்கினர்.

C) ‘விவசாயி சீர்குலைந்தால் அரசன் சீர்குலைவான்" என ஷெர்ஷா நம்பினார். படைகள் ஓரிடம் விட்டு வேறிடங்களுக்குச் செல்கையில் பயிர்களுக்குஸ் சேதம் ஏற்படக் கூடாது என்பதில் ஷெர்ஷா தனிக்கவனம் செலுத்தினார்.

D) தவறானது எதுவுமில்லை

**53)** தெய்வீக உரிமைக் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டவராக இருந்த டெல்லி சுல்தான் யார்?

A) சுல்தானா ரஸ்ஸியா
B) பால்பன்
C) ஜலாலுதீன் கில்ஜி
D) குத்புதீன் ஐபக்

**54)** இசுலாமியர் அல்லாதவர் மீது 'ஜிஸியா' வரியை முதன் முதலில் விதித்தவர் யார்?

A) குத்புதீன் ஐபக்
B) ஃபெரோஸ் துக்ளக்
C) ஔரங்கசீப்
D) அக்பர்

**55)** ஹரப்பா மக்களால் கூர் ஆயுதங்களை (Blades) உருவாக்க பயன்படுத்தப்பட்டவை எவை?

A) டெர்ரகோட்டா
B) ரோஹ்ரி சேர்ட்
C) லாஸ்ட் வெக்ஸ்
D) கார்னிலியன்

**56)** தவறான இணை எது?

A) சிவபுராணம் - எட்டு
B) விஷ்ணு புராணம் - நான்கு
C) பிரம்ம புராணம் - இரண்டு
D) அக்னி மற்றும் சூரியன் - தலா ஒரு புராணம்

**57)** சமன நூல்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

A) ஜைன சித்தாந்தங்கள்
B) ஆகம சித்தாந்தங்கள்
C) ஜான சித்தாந்தங்கள்
D) பிரப சித்தாந்தங்கள்

**58)** அரிகேசரி மாறவர்மனை சமண மதத்திலிருந்து சைவத்துக்கு மாற்றியவர் யார்?

A) மாணிக்கவாசகர்
B) திருஞானசம்பந்தர்
C) அப்பர்
D) சுந்தரர்

**59)** முதலாம் ராஜராஜனின் மகளான குந்தவை மணந்த சாளுக்கிய இளவரசரின் பெயர் என்ன?

A) விமலாதித்தன்
B) ஆதித்த கரிகாலன்
C) ராஜேந்திர சாளுக்கியன்
D) இரண்டாம் குலோத்துங்கன்

**60)** முகலாயர் காலத்தில் (தக்காணம் உட்பட) நிர்வாக மொழி எது?

A) பாரசீகம்
B) சமஸ்கிருதம்
C) வங்காளம்
D) பிராந்திய மொழிகள்

**61)** சரியான காலவரிசை எது?

1. மேதினிராய் தோல்வி
2. சௌசாப் போர்
3. கான்வா போர்
4. தீன்பனா நகர் உருவாக்கம்
5. கன்னோசிப் போர்

A) 1, 3, 4, 5, 2 B) 1, 2, 3, 4, 5 C) 3, 4, 1, 5, 2 D) 3, 1, 4, 2, 5

**62)** இந்தியக்கிளி என அழைக்கப்பட்ட கவிஞர்?

A) அல்பரூனி B) கைகுபாத் C) அமீர்குஸ்ரு D) உமர்கய்யாம்

**63)** வராகன் என்ற தங்க நாணயத்தில் இடம் பெற்றிருந்த கற்பனைப் பறவை எது?

A) கண்ட பெருண்டா B) ராஜாளி C) யாளி D) குதிரை யாளி

**64)** சமஸ்கிருதத்தின் முதல் உரைநடை என்று அழைக்கப்படும் வேதம் எது?

A) ரிக் B) யஜூர் C) சாமம் D) அதர்வணம்

**65)** சமணப் பிரிவினரில் வெண்ணிற ஆடை அணிபவர்கள் யார்?

A) திகம்பரர் B) சுவேதம்பரர் C) A & B D) எவருமில்லை

**66)** பின்வருவனவற்றுள் முதலாம் மகேந்திரவர்மனின் விருதுப் பெயர் அல்லாதது எது?

A) சேத்தகாரி B) விசித்திரசித்தன்
C) மத்தவிலாசன் D) வாத்தியவித்யாரதன்

**67)** பாண்டியர் கால முதல் மந்திரிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

A) மாரன்காரி B) குலச்சிறையார் C) உத்திர மந்திரி D) இவையனைத்தும்

**68)** முதலாம் இராசேந்திரனால் தோற்கடிக்கப்பட்ட வங்காளத்தின் அரசர் யார்?

A) மகிந்தன் B) சிவபாலன் C) மகிபாலன் D) மகிநந்தன்

**69)** கல்சா என்ற இராணுவ அமைப்பினை உருவாக்கி ஔரங்கசீப்பை இறுதிவரை எதிர்த்தவர் யார்?

A) ராஜ்சிங் B) அமர்சிங் C) பீம்சிங் D) கோவிந்த்சிங்

**70)** பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

1. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சியை கி.பி 12ஆம் நூற்றாண்டில் நிறுவியவர் தைமூர் ஆவார்
2. பல இலட்சங்களைக் கொடையாக வழங்கியதால் லக்பாக்ஷா எனப் புகழப்பட்டவர் அலாவுதீன் கில்ஜி ஆவார்
3. குத்புதீன் ஐபக் சிறுவனாக இருக்கும்போது ஓர் அடிமையாக முகமது கோரிக்கு விற்கப்பட்டார்
4. படை வீரர்களுக்கு கொள்ளையில் பங்கு தராமல், பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான் அலாவுதீன் கில்ஜி

A) 1 & 2 மட்டும் B) 2 & 3 மட்டும்
C) 3 & 4 மட்டும் D) மேற்கண்ட அனைத்தும்

ETW ACADEMY

**71)** வாரிசுரிமைப் போரில், சுந்தரபாண்டியன் யாருடைய உதவியை நாடினார்?

A) கியாசுதீன் துக்ளக் B) அலாவுதீன் கில்ஜி C) முகமது பின் துக்ளக் D) பால்பன்

**72)** நாகப்பட்டினத்தில் புத்தமடாலயம் கட்டுவதற்கு உதவிபுரிந்தவர் யார்?

A) முதலாம் குலோத்துங்கன் B) இராஜேந்திர சோழன்

C) இராஜராஜ சோழன் D) உத்தமசோழன்

**73)** மராத்தியர் காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் அதிகாரம் மிக்க ஒரு கிராமத் தலைவர் இருந்தார். அவர் யார்?

A) குல்கர்னி B) வருவாய் ஆலாசகர் C) தேஷ்முக் D) பட்டீல்

**74)** காஞ்சியில் வைகுந்தப் பெருமாள் கோவிலைக் கட்டியவர் யார்?

A) முதலாம் நந்திவர்மன் B) இரண்டாம் நந்திவர்மன்

C) முதலாம் நரசிம்மவர்மன் D) இரண்டாம் நரசிம்மவர்மன்

**75)** டங்கா என்ற வெள்ளி நாணயத்தையும் ஜிடால் என்ற செம்பு நாணயத்தையும் வெளியிட்ட முதல் சுல்தான் யார்?

A) பால்பன் B) இல்துமிஷ்

C) குத்புதீன் ஐபக் D) அலாவுதீன் கில்ஜி

**76)** பின்வரும் வாக்கியங்களில் தவறானவை எவை?

I) இந்து, சமணம் மற்றும் பௌத்தம் ஆகிய மூன்று சமயங்களும் கர்மாவை ஏற்கின்றன

II) சமணம் கடவுள் கொள்கை அவசியம் என்று கருதுகிறது

III) வீடுபேறு அடைய திரிபீடகங்களை கடைபிடிக்க வேண்டும் என்று சமணம் கூறுகிறது

IV) புத்தர், கடவுள், உயிர், சடங்கு ஆகியவற்றைப் பற்றி வரையறுத்துக் கூறினார்

V) புத்தர் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டிருந்தார்

A) I, III & V B) II, III, IV & V C) I, IV & V D) II, III & IV

**77)** பாபரின் நினைவுக் குறிப்புகளின் பெயர்?

A) அஜஊர்-இ-பாபரி B) சஜஊர்-இ-பாபரி

C) துசுக்-இ-பாபுரி D) தௌகீர்-இ-பாபரி

**78)** அக்பரின் காலத்தில் விவசாயிகளும், அரசாங்கமும் செய்துகொண்ட நிலவரி சம்பந்தமான ஒப்பந்தத்தின் பெயர் என்ன?

A) மன்சப் B) மன்சப்தாரி

C) குபிலியாத் D) கோலியாத்

**79)** தக்காணத்தில் வாழ்ந்த மக்கள் காலணியேதுமின்றி காணப்பட்டதாக குறிப்பிட்டுள்ள அயல்நாட்டுப்பயணி?

A) யுவான் சுவாங் B) நிகிடின்

C) பாகியான் D) பெர்னியர்

**80)** வணிக சமூகத்தினரை பொருத்துக:

(i) குஜராத் - 1. நாடோடி வணிகக் குழு

(ii) ரஜபுதனம் - 2. போராமுஸ்லீம்கள்

(iii) சோழமண்டலக் கடற்கரை - 3. முஸ்லீம்கள்

(iv) மலபார் - 4. செட்டியார்கள்

(v) பஞ்சாரா - 5. மார்வாரிகள்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 2 | 5 | 4 | 3 | 1 |
| C) | 3 | 2 | 4 | 5 | 1 |
| D) | 5 | 3 | 4 | 2 | 1 |

**81)** வெடியுப்பை பயன்படுத்தி நீரைக் குளிர்விக்கும் முறையைப் பரவலாக்கிய பெருமை யாரைச் சாரும்?

A) பாபர் B) அக்பர் C) ஷாஜகான் D) ஔரங்கசீப்

**82)** யாரின் கல்லறை, தாஜ்மஹாலுக்கு முன்னோடியென கருதப்படுகிறது?

A) ஹுமாயூன் B) அக்பர் C) பாபர் D) ஜகாங்கீர்

**83)** பின்வரும் கூற்றுகளை ஆராய்க:

1. சோழர் காலத்தில் ஜாதிமுறை காணப்படவில்லை

2. மகளிர் நிலையில் முன்னேற்றம் ஏதுமில்லை.

3. அரச குடும்பத்தாரிடையே 'சதி' என்ற உடன்கட்டையேறும் வழக்கம் இருந்தது.

4. கோயில்களுடன் பிணைக்கப்பட்டிருந்த நாட்டிய மகளிர் அடங்கிய தேவதாசி முறை சோழர் காலத்தில்தான் தோன்றி வளர்ந்தது.

A) 1 மட்டும் தவறு B) 2 மட்டும் தவறு C) 3 மட்டும் தவறு D) 4 மட்டும் தவறு

**84)** கல்ப சூத்திரம் என்னும் நூலை எழுதிய சமணத்துறவி யார்?

A) சாமுண்டராயா B) பத்ரபாகு C) பாகுபலி D) ரிஷபர்

**85)** வேதாந்த நெறிகளையும், அவற்றை உலகிற்களித்தவர்களையும் பொருத்துக:

(i) அத்வைதம் - 1. இராமானுஜர்

(ii) விசிஷ்டாத்வைதம் - 2. மத்துவர்

(iii) துவைதம் - 3. ஆதிசங்கரர்

- 4. வசிஷ்டர்

| | (i) | (ii) | (iii) |
|---|---|---|---|
| A) | 4 | 1 | 3 |
| B) | 4 | 3 | 1 |
| C) | 4 | 3 | 2 |
| D) | 3 | 1 | 2 |

**86)** பௌத்த சமய இலக்கியங்கள் எம்மொழிகளில் எழுதப்பட்டன?

A) பாலி, பிராமி B) பிராகிருதம், பிராமி

C) பாலி, பிராகிருதம் D) பிராகிருதம், சமஸ்கிருதம்

87) பின்வருவனவற்றுள் ராட்டிரகூடர்களின் கலை மற்றும் கட்டிடக்கலை சாதனைகளை நாம் எங்கு காணலாம்?

1. அஜந்தா
2. எல்லோரா
3. எலிபெண்டா
4. பட்டடக்கல்

A) 1, 3, 4 இல் காணலாம் B) 2, 3, 4 இல் காணலாம்
C) 3, 4 இல் மட்டும் காணலாம் D) 2, 4 இல் மட்டும் காணலாம்

88) விருப்பாக்ஷா கோவில் தமிழகத்தில் உள்ள எக்கோவிலை மாதிரியாக் கொண்டு கட்டப்பட்டுள்ளது?

A) தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் B) ஸ்ரீரங்கம் ரங்கராஜர் கோயில்
C) காஞ்சி கைலாசநாதர் கோயில் D) ஸ்ரீவெல்லிப்புத்தூர் கோயில்

89) ஐகோலோவில் உள்ள எக்கோவில் ஒரு புத்த சைத்தியத்தை போல தோற்றமளிக்கிறது?

A) லட்கான் கோயில் B) துர்க்கை கோயில்
C) ஹூச்சிமல்லி குடி கோயில் D) மெகுதி சமணக் கோயில்

90) இரண்டாம் புலிகேசி மற்றும் ஹர்ஷர் ஆகியோருக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, இருவருக்கும் இடையேயான எல்லையாக வரையறை செய்யப்பட்டது எது?

A) கிருஷ்ணா நதி B) துங்கபத்திரை நதி C) நர்மதை நதி D) யமுனா நதி

91) கிரதார்ஜூனியம் எழுதிய சமஸ்கிருத அறிஞர் பாரவி, யாருடைய காலத்தில் வாழ்ந்தவர்?

A) சிம்மவிஷ்ணு B) முதலாம் மகேந்திரவர்மன்
C) முதலாம் நரசிம்மவர்மன் D) இரண்டாம் மகேந்திரவர்மன்

92) யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய சின்னங்கள் அட்டவணையில் மாமல்லபுரம் சேர்க்கப்பட்ட ஆண்டு?

A) 1994 B) 1984 C) 1974 D) 2004

93) டெல்லி சுல்தானியத்தின் கடைசி அரசர்?

A) முகமது பின் துக்ளக் B) அலாவுதீன் கில்ஜி
C) சிக்கந்தர் லொடி D) இப்ராஹிம் லோடி

94) சரியான காலவரிசை எது?

1. பதேபூர்சிக்ரி உருவாக்கம்
2. ராணா பிரதாப் சிங்கின் மரணம்
3. தீன் இலாஹி மதம் அறிவிப்பு
4. நீதிச்சங்கிலி முறை

A) 1, 2, 3, 4 B) 2, 3, 1, 4
C) 2, 1, 3, 4 D) 1, 3, 2, 4

ETW ACADEMY

**95)** பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

1. ஹரப்பா இருந்ததற்கான முதல் ஆதாரத்தை வெளியிட்டவர் சார்லஸ் மேசன் ஆவார்.

2. 1924 இல் அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் ஹரப்பாவிற்கும், மொஹஞ்சதாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருந்ததை கண்டறிந்தார்

3. 1861ஆம் ஆண்டு, இவரது உதவியால் இந்திய தொல்லியல் துறை உருவாக்கப்பட்டதால், இந்திய தொல்லியல் துறையின் தந்தை என "அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்" அழைக்கப்படுகிறார்.

4. மொஹஞ்சதாரோ நாகரீகமானது ஹரப்பா நாகரிகத்தை விட பழமையானது ஆகும்

A) 1, 2 & 3 B) 2, 3 & 4 C) 1 & 3 D) 1, 2 & 3

**96)** சீனாவிற்கு தனது தூதுக்குழுவை அனுப்பிவைத்தவர் யார்?

A) இரண்டாம் மகேந்திரவர்மன் B) முதலாம் நரசிம்மவர்மன்

C) இரண்டாம் நரசிம்மவர்மன் D) முதலாம் நந்திவர்மன்

**97)** சாளுக்கிய சோழ மரபை தோற்றுவித்தவர் யார்?

A) இரண்டாம் குலோத்துங்கன் B) முதலாம் பராந்தகன்

C) இரண்டாம் பராந்தகன் D) முதலாம் குலோத்துங்கன்

**98)** தாஜ்மஹால் எந்தெந்த கட்டக்கலைகளின் கூட்டுக்கலவை?

A) துருக்கிய, பாலஸ்தீன, ஆப்கானிய B) பாரசீக, பாலஸ்தீன, இஸ்லாமிய

C) இந்திய, பாரசீக, இஸ்லாமிய D) பாலஸ்தீன, இந்திய, இஸ்லாமிய

**99)** சையது மரபினை தொடங்கியவர்

A) கிஸிர்கான் B) முகமதுஷா

C) முகமதுகான் D) தௌலத்கான் லோடி

**100)** முணுமுணுக்கும் அரங்கம் என்ற சிறப்பைப் பெற்றுள்ள கட்டடம் எது?

A) கோல்கொண்டா B) கோல்கும்பாஸ் C) ஜாமீ மசூதி D) ஜும்மா மசூதி

**101)** பாண்டியர்கள் குறித்த வரலாற்று செய்திகளை நாம் எதன் மூலம் அறியலாம்?

1. பிளினி குறிப்புகள்

2. மெகஸ்தனிஸ் குறிப்புகள்

3. யுவான் சுவாங் குறிப்புகள்

4. மார்க்கோபோலோ குறிப்புகள்

A) 1 ஐத் தவிற அனைத்தும் B) 2 & 3 மட்டும்

C) 2, 3 & 4 மட்டும் D) மேற்கண்ட அனைத்தும்

**102)** அடையாள நாணைய முறையை வெளியிட்டவர் யார்?

A) பெரோஷா துக்ளக் B) முகமது - பின் - துக்ளக்

C) அலாவுதீன் கில்ஜி D) அக்பர்

ETW ACADEMY

**103)** ஹரியானாவின் ராகிகர்கியில் கண்டிபிடிக்கப்பட்ட தானியக் களஞ்சியமானது எந்தக் காலத்தை சேர்ந்தது?

A) தொடக்ககால ஹரப்பா B) பிற்கால மொகஞ்சதாரோ

C) பிற்கால மொகஞ்சதாரோ D) முதிர்ச்சியடைந்த ஹரப்பா

**104)** 'மகாராஜாதிராஜா, ஸ்ரீபரமேஸ்வரன், பொன்வேய்ந்த பெருமாள்' என்றெல்லாம் சிறப்பிக்கப்பட்டவர் யார்?

A) முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் B) இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன்

C) முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் D) முதலாம் சடையவர்ம சுந்தரபாண்டியன்

**105)** இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தனை வென்றவர் யார்?

A) முதலாம் இராஜராஜ சோழன் B) முதலாம் ராசேந்திர சோழன்

C) ஆதித்த கரிகாலன் D) முதலாம் பராந்தகன்

**106)** சோழர்காலத்தில் கிராம சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது தொடர்பான கூற்றுகளை ஆராய்க:

1. ஒவ்வொரு குடும்பிலிருந்தும் தகுதியுடைய வேட்பாளர்களின் பெயர்கள் பனையோலைத் துண்டுகளில் எழுதப்படும்.

2. அவை மட்பாண்டம் ஒன்றில் போடப்படும்.

3. மன்றத்தின் மூத்த உறுப்பினர் குடத்துக்குள் உள்ள ஓலைத் துண்டுகளை எடுத்து அதில் எழுதப்பட்டுள்ள பெயரை அறிவிப்பார்.

4. இம்முறையின்படி பல குழுக்கள் முடிவு செய்யப்படும்.

A) 1 மட்டும் தவறு B) 2 மட்டும் தவறு C) 3 மட்டும் தவறு D) 4 மட்டும் தவறு

**107)** 1803இல் ஆண்டில் நிறுவப்பட்ட _____ சத்திரம், இரண்டாம் சரபோஜியின் விருப்பமான அன்ன சத்திரமாகும்.

A) கண்ணாம்பாள் B) ஜகதாம்பாள் C) மகதாம்பாள் D) முக்தாம்பாள்

**108)** சட்லெஜ் நதியிலிருந்து ஹன்ஸிக்கு கால்வாய் வெட்டியவர் யார்?

A) ஃபெரோஸ் துக்ளக் B) ஜகாங்கீர்

C) ஹூமாயூன் D) அலாவுதீன் கில்ஜி

**109)** குப்தர் கால வணிகக் குழுக்கள் வங்கிகளின் பங்கினை ஆற்றியதை நாம் எதன் மூலம் அறிய முடிகிறது?

A) அலகாபாத் தூண் B) மெக்ராலி இரும்புத்தூண்

C) குதுப்மினார் D) மண்டசோர் கல்வெட்டு

**110)** மெசபடோமியாவிற்கும், ஹரப்பர்களுக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பை வெளிபடுத்தும் ஆவணங்கள் எவை?

A) கியூனிபார்ம் ஆவணங்கள் B) வியன்னா பாப்பிரஸ்

C) பியூட்டிங்கேரியன் அட்டவணை D) கார்னிலியன் ஆவணங்கள்

**111)** புத்தர் தனது முதல் உரையை எங்குள்ள மான் பூங்காவில் நிகழ்த்தினார்?

A) பாடலிபுத்திரம் B) சாரநாத் C) அயோத்யா D) முசாஃபர்

ETW ACADEMY

**112)** இரண்டாம் நரசிம்மவர்மனின் காலத்தில் கட்டப்பட்ட கோவில்களில் சேராதது எது?

A) மாமல்லபுர கடற்கரை கோயில்
B) காஞ்சி கைலாசநாதர் ஆலையம்
C) காஞ்சி காமாட்சி கோயில்
D) பனைமலை தாளகிரீஸ்வரர் கோயில்

**113)** இரண்டாம் சரபோஜியின் அரசவை நடத்திய பள்ளிகளில் புதிய அல்லது நவீன கல்வி முறைக்காக எம்முறை அறிமுகம் செய்யப்பட்டது?

A) பஞ்சகாவ்யா
B) தசவித்யா
C) நவவித்யா
D) நவகாவ்யா

**114)** இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ் அனுப்பிய தூதுவருக்கு, 1615இல் சூரத் நகரில் ஒரு வணிகக் குடியேற்றத்தை அமைத்துக் கொள்வதற்கான அனுமதியை ஜகாங்கீரிடமிருந்து பெற்றுத்தந்தவர்?

A) வில்லியம் ஹாக்கின்ஸ்
B) சர் தாமஸ் ரோ
C) சரி ஜேம்ஸ் ஆண்டர்சன்
D) எர்னஸ்ட் ஹம்மிங்க்வே

**115)** நாற்பதிமரை ஒழித்தவர் மற்றும் வணிகத்தங்களையும், கிராம சந்தைகளையும் பதுகாக்க புதிய கோட்டைகளை கட்டியவர்?

A) இல்துமிஷ்
B) நசீர் அல்லுதீன் முகமது
C) கியஸ் - அல் - தீன் பால்பன்
D) குத்புதீன் ஐபக்

**116)** சிந்துவெளிமக்கள் பயன்படுத்திய எடைகள், அவர்களுக்கு _____ எண் முறை பற்றி தெரிந்திருந்ததை காட்டுகிறது.

A) கீழ்காணும் அனைத்தும்
B) ஹெக்சா டெசிமல் எண்முறை
C) ஆக்டட் எண்முறை
D) பைனரி எண் முறை

**117)** பொருத்துக:

(i) வசீர் - 1. வெளியுறவு அமைச்சர்
(ii) திவானி ரிஸாலத் - 2. பிரதம அமைச்சர் மற்றும் நியமைச்சர்
(iii) சுதர்-உஸ்-சாதர் - 3. அஞ்சல் துறை அமைச்சர்
(iv) திவானி இன்ஷா - 4. பாதுகாப்புத்துறை & படைத்துறை அமைச்சர்
(v) திவானி அர்ஸ் - 5. இஸ்லாமிய சட்ட அமைச்சர்

| | (i) | (ii) | (iii) | (iv) | (v) |
|---|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 5 | 1 |
| B) | 2 | 1 | 5 | 3 | 4 |
| C) | 1 | 2 | 3 | 4 | 5 |
| D) | 1 | 5 | 4 | 3 | 2 |

**118)** முதலாம் மகேந்திரவர்மனின் குடைவரைக் கோயில்களை நாம் எங்கு காணமுடியாது?

A) மகேந்திரவாடி
B) மாமல்லபுரம்
C) பல்லாவரம்
D) திருச்சிராப்பள்ளி

ETW ACADEMY

119) கோல்கும்பாஸ் தர்காவைக் கட்டியவர் யார்?

A) அடில்ஷா B) ஔரங்கசீப் C) ஆசாம் ஷா D) ஷாஆலம்

120) சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த முக்கிய பகுதிகளில் சேராதது எது?

A) பீகார் B) குஜராத் C) ராஜஸ்தான் D) ஹரியானா

121) இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயர்களில் சேராதது எது?

A) கடாரம் கொண்டான் B) கங்கை கொண்டான்

C) பண்டித சோழன் D) ஜெயம்கொண்டான்

122) பொருத்துக:

(i) முகமது பின் துக்ளக் - 1. அரசப் பதவி கருத்து

(ii) அலாவுதீன் கில்ஜி - 2. ஹசன் நிசாமி

(iii) பால்பன் - 3. அங்காடி சீர்திருத்தங்கள்

(iv) குத்புதீன் ஐபக் - 4. அடையாள நாணயம்

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 1 | 2 |
| B) | 2 | 3 | 4 | 1 |
| C) | 4 | 3 | 2 | 1 |
| D) | 2 | 4 | 1 | 3 |

123) இரண்டாம் சரபோஜியின் இறுதி ஊர்வலத்தில் பின்வரும் கூற்றைக் கூறியவர் யார்? "முடிசூடிய பல தலைவர்களைப் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் இவர் தவிர எவரிடமும் அது இளவரசத் தன்மையோடு அலங்கரித்ததில்லை"

A) பிஷப் ஹீபர் B) சி.எஸ். ஜான் C) தாமஸ் மன்றோ D) புனித சேவியர்

124) குதுப்மினாரின் கட்டுமான பணிகளை நிறைவுசெய்தவர்?

A) ரஸ்ஸியா B) குத்புதீன் ஐபக் C) இல்துமிஷ் D) பால்பன்

125) பௌத்தசமய நூல்களின் (பீடகங்கள்) விளக்கஉரையான விபாஷங்கள் தொகுக்கப்பட்ட மாநாடு எது?

A) முதல் பௌத்த மாநாடு

B) இரண்டாம் பௌத்த மாநாடு

C) மூன்றாம் பௌத்த மாநாடு

D) நான்காம் பௌத்த மாநாடு

126) அதிராஜேந்திரனின் மறைவைக் கேள்விப்பட்டவுடன், சோழ அரியணையைக் கைப்பற்றிய கீழை சாளுக்கிய இளவரசர் யார்?

A) ராஜேந்திர சாளுக்கியன்

B) ராஜகுமார சாளுக்கியன்

C) சுந்தர சாளுக்கியன்

D) ராமராஜ சாளுக்கியன்

ETW ACADEMY

**127)** பின்வரும் கூற்றுகளில் சரியானவை எவை?

1. பிற்கால சோழர்கள் அடையாளச் சோழர்கள் என்றும் அழைக்கப்பட்டனர்
2. கி.பி. 815 இல், விஜயாலய சோழன், நாயக்கர்களிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி பேரரசு சோழமரபை தொடங்கினார்.
3. முதலாம் இராஜராஜனுக்குப் பின்வந்தோர் கங்கை கொண்ட சோழபுரத்தை தலைநகராகக் கொண்டிருந்தனர்
4. பாண்டியர்களின் தலைநகரான மதுரையை வென்றதால் மதுரை கொண்டான் என புகழப்பட்டவர் முதலாம் ராஜராஜ சோழன் ஆவார்

A) 1 & 2 B) 1 & 4
C) 1, 2 & 3 D) மேற்கண்ட எதுவுமில்லை

**128)** பாஸ்கரச்சாரியரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிபெயர்த்த அக்பரின் அவைக்களப் புலவர் யார்?

A) தோடர்மால் B) அபுல் பாசல் C) பெய்சி D) அபு பக்கர்

**129)** அஜ்மீரில் உள்ள குவாத் உல் இஸ்லாம் மசூதியைக் கட்டியவர்?

A) இல்துமிஷ் B) குத்புதீன் ஐபக் C) பால்பன் D) இல்திஸ்

**130)** சுஸ்ருதர் பின்வரும் எந்த செய்முறையைப் பற்றி விளக்கிய முதல் இந்தியர் ஆவார்?

A) ஆயுர்வேதம் B) அக்கு பஞ்சர்
C) அறுவை சிகிச்சை D) ஒளிக்கதிர் சிகிச்சை

**131)** இரண்டாம் புலிகேசிக்கெதிரான போர் வெற்றியின் மூலம், மாமல்லன் சூடிக்கொண்ட பட்டம் என்ன?

A) பதாமி கொண்டான் B) வெங்கி கொண்டான் C) வாதாபி கொண்டான் D) பதாமி பரதன்

**132)** இராஜராஜனின் சிறப்புப் பெயர்களில் சேராதது எது?

A) கடாரம் கொண்டான் B) மும்முடிச்சோழன்
C) ஜெயங்கொண்டான் D) சிவபாதசேகரன்

**133)** கொங்கணம், கண்டேரி, விஜயதுர்க் ஆகிய இடங்களில் கடற்படைத் தளங்களைக் கட்டியவர் யார்?

A) சிவாஜி B) பாஜிராவ்
C) பாலாஜி பாஜிராவ் D) பாலாஜி விஸ்வநாத்

**134)** ஷாஜகானின் சமகாலத்தவரான பிரான்ஸ் அரசன் யார்?

A) பதினான்காம் லூயி B) பதிமூன்றாம் லூயி
C) பன்னிரண்டாம் லூயி D) பதினாறாம் லூயி

**135)** "மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்" என்று கூறும் வேதம் எது?

A) யஜூர் B) அதர்வண C) சாமம் D) ரிக்

**136)** 1713 இல் சாஹூவால் முதல் பேஷ்வாவாக நியமிக்கப்பட்டவர் யார்?

A) பாலாஜி விஸ்வநாத் B) பாலாஜி பாஜிராவ்
C) மாதவ்ராவ் D) நாராயணராவ்

ETW ACADEMY

**137)** இரண்டாம் புலிகேசிக்கெதிரான மாமல்லனின் போர் வெற்றியை குறிப்பிடுவது எது?

A) அய்கோலே கல்வெட்டு B) கூரம் செப்பேடுகள்

C) மணிமங்கலம் கல்வெட்டு D) விருபாக்ஷா கல்வெட்டு

**138)** தாஹாசாலா நில வருவாய் முறையை சீரமைத்தவர் யார்?

A) ராஜா தோடர்மால் B) பீர்பால்

C) ரகீம் கான் - இ - கானான் D) தாராஷூகோ

**139)** கப்பலின் ஒட்டகம் எனச் சொல்லப்படும் தொழில் நுட்பத்தை உலகத்திலேயே கண்டறிந்த முதல் மனிதர் புகழப்படுபவர் யார்?

A) பாபர் B) அக்பர் C) ஹிமாயூன் D) ஜகாங்கீர்

**140)** உலகப் பாரம்பரிய சின்னமாக யுனஸ்கோவால் தற்பொழுது அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நகரமான ஹம்பி, எந்தப் போரில் அழிக்கப்பட்டது ஆகும்?

A) பாரதப்போர் B) தலைக்கோட்டைப் போர்

C) வெண்ணிப் போர் D) கன்னோசிப் போர்

**141)** மொஹஞ்சதாரோ சிற்பம் பற்றிய தவறான இணை எது?

I. நாட்டிய மங்கை - சுண்ணாம்புக்கல் சிலை

II. தாடியுடன் காட்சி தரும் ஒருவர் - வெண்கலச் சிலை

A) I மட்டும் B) II மட்டும் C) I & II D) ஏதுமில்லை

**142)** பின்வரும் வாக்கியங்களில் சரியானவை எவை?

I) "அரசன் சீர்குலைந்தால் விவசாயி சீர்குலைவான்" என ஷெர்ஷா நம்பினார்.

II) படைகள் ஓரிடம் விட்டு வேறிடங்களுக்குச் செல்கையில் பயிர்களுக்கு சேதம் ஏற்படக் கூடாது என்பதில் தனிக்கவனம் செலுத்தியவர் ஷெர்ஷா ஆவார்

III) ஷெர்ஷா அறிமுகப்படுத்திய புதிய வெள்ளி நாணயங்கள்: "நிக்க்ஷா" - அவை 1835 ஆம் ஆண்டுவரை புழக்கத்தில் இருந்தன.

IV) ஷெர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் மாலிக் முகமது ஜெயசி என்பவர் புகழ்வாய்ந்த இந்தி நூலான பத்மாவத் என்ற நூலைப் படைத்தார்.

A) II & IV B) I & III C) III & IV D) II & III

**143)** சிவாஜியின் தந்தை ஷாஜி சில காலம் யாரிடம் பிரபுவாக பணியாற்றினார்?

A) அக்பர் B) ஜகாங்கீர் C) ஷாஜகான் D) ஔரங்கசீப்

**144)** பாஸ்கரச்சாரியரின் புகழ்பெற்ற கணித நூலான லீலாவதியை மொழிபெயர்த்த அக்பரின் அவைக்களப் புலவர் யார்?

A) தோடர்மால் B) அபுல் பாசல் C) பெய்சி D) அபு பக்கர்

**145)** முதலாம் ராஜேந்திரன் _____ எனும் கிராமத்தில் வேதக் கல்லூரி ஒன்றை நிறுவினார்.

A) எண்ணாயிரம் B) பன்னாயிரம் C) கடிகை D) பொற்கடிகை

ETW ACADEMY

**146)** புத்தமதக் கொள்கைகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) மூன்று பேருண்மைகள் B) நான்கு பேருண்மைகள்

C) ஐந்து பேருண்மைகள் D) ஆறு பேருண்மைகள்

**147)** பின்வரும் வாக்கியங்களில் சரியானவை எவை?

I) வேதம் என்ற சொல்லின் பொருள் "எல்லையில்லா கருணை" என்பதாகும்

II) காயத்திரி மந்திரம் இடம்பெற்றுள்ள வேதம் அதர்வண வேதம் ஆகும்

III) ரிக் வேதம் 1028 பாடல்களைக் கொண்டது

IV) இறைவனைத் துதிப்பாடல்களால் பாடி வணங்குவதற்குரிய வழிகளைக் கூறும் வேதம் ரிக் வேதம் ஆகும்

A) I & II B) I & III C) III & IV D) II & IV

**148)** ஹர்ஷவர்த்தனர் இரண்டாம் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டதைக் குறிப்பிடுகின்ற கல்வெட்டு எது?

A) வாதாபி குகைக் கல்வெட்டு B) அய்கோல் கல்வெட்டு

C) கைலாசநாதர் கோயில் கல்வெட்டு D) விருப்பாக்ஷா கோவில் கல்வெட்டு

**149)** பல்லவ மரபின் கடைசி மன்னர் யார்?

A) இரண்டாம் நந்திவர்மன் B) மூன்றாம் நந்திவர்மன்

C) மூன்றாம் பரமேஸ்வரன் D) அபராஜிதன்

**150)** பின்வரும் பட்டப்பெயர்கள் யாருடையவை?

1. விக்கிரமாதித்யர்
2. நரேந்திர சந்திரர்
3. சிம்ம சந்திரர்
4. விக்கிரம தேவராஜர்

A) முதலாம் சந்திரகுப்தர் B) சமுத்திரகுப்தர்

C) பாலாத்தியர் D) இரண்டாம் சந்திரகுப்தர்

**Reminder on Week 12 - Test Schedule**

~~1. ஞாயிறு அன்று காலை 6 மணிக்கு தமிழ் கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்~~ → COMPLETED

~~2. ஞாயிறு மாலை 6 மணிக்கு தமிழ் Answer Key வெளியாகும்.~~ → COMPLETED

~~3. ஞாயிறு மாலை 6.30 க்கு Indian Polity கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்~~ → COMPLETED

~~4. திங்கள் காலை 6 மணிக்கு Polity Answer Key வெளியாகும்~~

~~5. திங்கள் காலை 6.30 மணிக்கு இந்திய வரலாறு - Indian History கேள்வித்தாள் (150 Questions) வெளியாகும்.~~ → COMPLETED

6. திங்கள் மாலை 6.30க்கு History Answer Key வெளியாகும்.

7. தனித்தனியான மதிப்பெண் பட்டியல் வெளியிடப்படும்.

***

© ETW Academy